

வல்லம் ஒன்றியம் மொடையூர் ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பிறந்தநாளை முன்னிட்டு நடந்த கண் சிகிச்சை முகாமை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர்,ஒன்றிய சேர்மன் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை,இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.

# சென்னையில் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி - 2023!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன்.13-

சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023 சென்னை தொடக்கவிழா நேற்று முன்தினம் (12/06/2023) எக்ஸ்பிரஸ் அவென்யூ மைய வளாகத்தில் நடைபெற்றது. இந்த சர்வதேச ஸ்குவாஷ் போட்டியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது :

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் நல் ஆதரவுடன் இந்த உலக கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னையில் சிறப்புடன் நடைபெறுகிறது. இந்தப் போட்டியானது 12 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் நடத்தப்படுவது சிறப்புக்குரியது. இந்த போட்டியை சிறப்பாக நடத்துவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். 2023 ஸ்குவாஷ் உலகக் கோப்பையில் போட்டியை நடத்தும் இந்தியாவுடன் ஹாங்காங், சீனா, ஜப்பான், மலேசியா, எகிப்து, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கொலம்பியா ஆகிய எட்டு நாடுகளை சேர்ந்த தலைசிறந்த ஸ்குவாஷ் வீரர்கள் பங்கேற்கின்றனர்.


இந்த போட்டியில் பல்வேறு நாடுகளிலிருந்து வந்துள்ள வீரர்கள் அனைவரையும் வரவேற்பதிலும், சர்வதேச ஸ்குவாஷ் போட்டியை தொடங்கி வைப்பதிலும் மகிழ்ச்சியடைகிறேன் எனக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் போட்டியில் பங்கேற்கின்ற வீரர்களின் அணிவகுப்பினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் வயலின் இசை மற்றும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த தொடக்கவிழாவில் உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பு தலைவர் ஜீனா வூல்ட்ரிட்ஜ் மற்றும் இந்திய ஸ்குவாஷ் ராக்கெட்ஸ் கூட்டமைப்பு தலைவர், அனில் வாத்வா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ,மேகநாத ரெட்டி, தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் மற்றும் சாம்பியன்ஷிப் கமிட்டி சேர்மன் என். இராமச்சந்திரன் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் MGNREGS திட்டத்தின் கீழ் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள் துவக்க விழா நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர் என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே. பொன்னுசாமி, ஒன்றிய கழகச் செயலாளர் அ.அசோக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டை நியாய விலைக்கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு கிலோ கேழ்வரகு (ராகி) விநியோகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி முன்னிலையில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (12.06.2023) தொடங்கி வைத்தார்கள். உடன் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் வி.ராஜாராம், சென்னை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் நிர்வாக இயக்குநர் மரு. எஸ்.பிரபாகர், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு.அனிதா, தருமபுரி நகர்மன்றத் தலைவர் திருமதி. மா. லட்சுமி, முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தடங்கம்.பெ.சுப்பிரமணி, மனோகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜி.சேகர், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.பெ.மகேஸ்வரி உட்பட தொடர்புடைய அலுவலர்கள், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### தருமபுரி அதியமான்கோட்டை

# நியாயவிலைக் கடையில் கேழ்வரகு விநியோகத் திட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் துவக்கி வைத்தார்!

தருமபுரி, ஜூன் 14 -

தர்மபுரியில் அதியமான்கோட்டை நியாய விலைக்கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு கிலோ கேழ்வரகு (ராகி) விநியோகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி. சாந்தி முன்னிலையில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (12.06.2023) தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 175 பயனாளிகளுக்கு ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், குடும்பஅட்டைகளையும், திருமண உதவித்தொகைகளையும், முதியோர் உதவித்தொகைகளையும், இந்திராகாந்தி தேசிய உதவித்தொகைகளையும், மாற்றுதிறனாளி உதவித்தொகைகளையும், தற்காலிக இயலாமைக்கான உதவித்தொகைகளையும், விதவை, ஆதரவற்ற விதவை உதவித்தொகைகளையும், இயற்கை மரண உதவித்தொகைகளையும்,

கூட்டுறவுத்துறையின் சார்பில் 242 பயனாளிகளுக்கு ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் இலளிகம், என்.எஸ்.ரெட்டியூர், அதியமான் கோட்டை, கம்மம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலம் பயிர்க்கடன் உதவிகளையும், மகளிர் சுயஉதவிக் குழுக்கடன் உதவிகளையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.34.68 இலட்சம் மதிப்பீட்டில் கடன் உதவிகளையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.270/ மதிப்பீட்டிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.55,155/ மதிப்பீட்டிலும்,

மகளிர் திட்டம் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டிலும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டிலும், தமிழ்நாடு மாநில ஊரக/நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டிலும், EST&P Training திட்டத்தின்கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் என மொத்தம் 451 பயனாளிகளுக்கு ரூ.3.44 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சிறுதானிய கண்காட்சி அரங்குகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் பார்வையிட்டார்கள்.

பின்னர் அதியமான் கோட்டை அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மாணவ, மாணவியர்களுக்கான விலையில்லா பாடநூல் மற்றும் நோட்டுப் புத்தகங்களை வழங்கினார்.

இவ்விழாவில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் வி.ராஜாராம் சென்னை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மேலாண்மை இயக்குநர் மரு. எஸ்.பிரபாகர் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு.அனிதா, தருமபுரி நகர்மன்றத் தலைவர் திருமதி. மா. லட்சுமி, முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தடங்கம். பெ.சுப்பிரமணி, மனோகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஜி.சேகர், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.பெ. மகேஸ்வரி, காரிமங்கலம் பேரூராட்சி தலைவர் பி.சி. ஆர்.மனோகரன், கைம்பெண் வாரிய உறுப்பினர் திருமதி. ரேணுகா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராமதாஸ், முதன்மை கல்வி அலுவலர் கு.குணசேகரன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திருமதி. க.விஜயா, உட்பட தொடர்புடைய அலுவலர்கள், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! "நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் 25 தொகுதிகளில் வெற்றி பெறுவதே இலக்கு" என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! அமித்ஷா அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பதைப் பார்த்தவுடன் பல பழமொழிகள் நமது நினைவில் உலா வருகின்றன. அவற்றுள் முக்கியமானவை: "அத்தைக்கு மீசை முளைத்தால்..."; "இல்லாத ஊருக்கு, போகாத வழி" என்பவை ஆகும் !**

**நல்ல வேளை, "இலக்கு" என்றுதான் சொல்லியிருக்கிறார். இலக்கு 39 என்று கூடச் சொல்லலாம்; தவறில்லை; ஆனால் இலக்கைச் சொல்லும்போது, அதற்குரிய அடிப்படைக் கட்டமைப்பு இருக்க வேண்டுமே !**



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளருமான டாக்டர். பொன். கௌதமசிகாமணி விழுப்புரம் மாவட்ட "பென்காக் ஸ்லாட் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளின் கோரிக்கையை ஏற்று தனது சொந்த நிதியிலிருந்து ரூ. 2 (இரண்டு) இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வாழ்த்துரை வழங்கினார். இதில் செ. புஷ்பராஜ், தயா. இளந்திரையன், இரா. சக்கரை, செ.தினகரன், தொ.மு.ச. வி. சேகர், வாலிபால் மணி, சித்திக் அலி, என். என். இளங்கோ, பொன்னங்குப்பம் முரளி, ஸ்ரீ. வினோத், கபாலி, ப. அன்பரசு, ஆர். பி. பரத், தொ.மு.ச. வேலு, மனோகர், இரவிச்சந்திரன், குபேரன், பெருமாள், செ. மணிகண்டன், பி.கே.சங்கர், சுந்தர், நிர்மல் ராஜ், இராஜசேகர், ராமராஜ், தாமரை மணாளன், பிரவீன், சந்தோஷ், பிரகதீஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.